# சங்க இலக்கியங்களின் வழி அறியலாகும் பண்டைத் தமிழர் வணிகம்

பேராசிரியர். **கி. விசாகரூபன்**

*சிரேஷ்ட பேராசிரியர் மற்றும் தலைவர், தமிழ்த்துறை, கலைப்பீடம்,*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.*

## அறிமுகம்

*தமிழ் இலக்கிய மரபில் சங்க இலக்கியங்கள் தனித்துவமான வரலாற்று ஆவணங்களாக விளங்குகின்றன. அக்காலத் தமிழ்ச் சமூகத்தின் வாழ்க்கை முறை, அரசியல், பொருளாதாரம், மற்றும் பண்பாடு, வணிகம் வளர்ச்சியை வெளிப்படுத்துகின்றன. இவற்றுள் குறிப்பிடத்தக்க ஒன்றாக அமைவது கடல் சார்ந்த வாழ்க்கையும் கடல்வணிகமும் ஆகும். நிலவழி வணிகத்துடன் இணைந்து கடல்வழி வணிகமும் சிறப்புற்றிருந்தது. சங்கத்தமிழன் கடலை அச்சத்தின் அடையாளமாகக் கருதாமல் வாழ்வாதாரமாகவும் வணிகப்பாதையாகவும் கண்டான். கடல் வணிகம் சங்கத் தமிழரது பொருளாதார முன்னேற்றத்திற்கும் வெளிநாட்டுத் தொடர்புகளுக்கும் அடித்தளமாக அமைந்தது. வெறுமனே பொருளாதாரச் செயல்பாடாக மட்டுமல்லாது சமூகமாற்றங்களையும் இது உருவாக்கியது. சங்கப் பனுவல்கள் தமிழர்களின் கடல்சார் அறிவு, வணிகத்திறன், வெளிநாட்டுத் தொடர்புகள், ஏற்றுமதி இறக்குமதி, பொருளாதாரச் சிந்தனை ஆகியவற்றை அறிய உதவுகின்றன. சங்க காலப் பொருளாதார வளர்ச்சியில் கடல் வணிகம் வகித்த பங்கை வெளிக்கொணர்வது இந்த ஆய்வின் நோக்கமாக அமைகின்றது. சங்ககாலத்தில் தமிழர்கள் வணிகத்தில் சிறந்து விளங்கிய முன்னேறிய சமூகமாக இருந்தனர் என்பதும் கடல் வணிகம் சங்கப் பொருளாதார வளர்ச்சிக்கும் நகர வளர்ச்சிக்கும் முக்கிய காரணமாக இருந்தது என்பதும் இவ்வாய்வின் கருதுகோளாக அமைகின்றது.*

*சங்க இலக்கியங்களான எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் இந்த ஆய்விற்கான மூலங்களாகக் கொள்ளப்படுகின்றன.*

இலக்கியச்சான்றுகளின் வழியாக வரலாற்றை மீள் கட்டமைக்கும் இந்த ஆய்வு தமிழர்களின் கடல் வணிக மரபின் தொன்மையையும் சிறப்பையும் தெளிவாகப் புரிந்துகொள்ள உதவும்.

**பண்டமாற்று வணிகம்**

உற்பத்தியில் தன்னிறைவை அடைந்த சங்கத் தமிழர்கள் காலவோட்டத்தில் உற்பத்தி பெருக விற்பனையில் ஈடுபட்டனர். இதன் காரணமாக வணிகம் என்னும் புதிய துறை உருவானது. பணப்புழக்கம் இல்லாத இக்காலத்தில் பொருட்களுக்குப் பதிலாகப் பொருட்களைப் பரிமாறும் பண்டமாற்று வணிகமுறையே காணப்பட்டது. ஒவ்வொரு நிலத்தவரும் தம் உற்பத்திப் பொருட்களில் தமது பயன்பாட்டுக்குரியவை போக உபரியானவற்றைத் தேவைப்பாடுடையவர்களுக்குக் கொடுத்து அவற்றுக்கீடாகத் தமக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொண்டனர். இத்தகைய வணிக முறையில் நெல்லை அளவாக வைத்தே பிற பொருட்கள் மதிப்பிடப்பட்டன.

"நெல்லும் உப்பும் நேரே யூரிர்
கொள்ளீ ரோவெனச் சேரிதொறும் நுவலும்" (அகம்.290)

என்ற அடிகளில் நெல்லும் உப்பும் விலை ஒப்பாகும் என்பதைக் காணலாம். பொருணராற்றுப்படையில் (216-217) கரும்பையும் அவலையும் விற்று அதற்கு மாறாக மான் தசையையும் கள்ளையும் பெற்றுச் சென்றுள்ளதையும் குறுந்தொகையில் (221:3) பாலை விற்று அதற்குப்பதிலாக உணவினைப் பெற்றுச் சென்றுள்ளதையும் தயிருக்குப்பதிலாகக் குளநெல் (புறம்.33) பெற்றுக்கொண்டதையும் அறிய முடிகிறது.

**கடல் வணிகம்**

பண்டைத் தமிழர்கள் உள்நாட்டு வணிகத்தில் சிறந்து விளங்கியதைத் தொடர்ந்து அதன் அடுத்தகட்ட வளர்ச்சியாகக் கடல்கடந்த நாடுகளுடன் வணிகம் செய்வதில் ஈடுபட்டனர். ஒரு நாடு தன் மக்களுக்குத் தேவையான அனைத்தையும் கொண்டிருக்க முடியாது. தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே



கடல் கடந்த நாடுகளுடன் வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர். கடல்வணிகம் செய்வதற்கும் அவ்வணிகத்தில் சிறப்புற்று விளங்குவதற்கும் ஆதாரமாய் இருப்பவை கப்பல்களும் கப்பலோட்டிகளுமே. ஆழ்கடலில் அச்சமின்றி செல்வோரைப் பண்டைத்தமிழர்கள் பெருநீரோச்சுனர் எனப் பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளனர். பலகை, மிதவை, புணை, தெப்பம், மரம், கட்டுமரம், திமில், ஓடம், படகு, அம்பி, தோணி, நாவாய், வங்கம், கலம் முதலாகப் பல்வேறு அளவினையுடைய கப்பல்கள் பற்றிய பதிவுகள் சங்க இலக்கியங்களில் பரவலாகக் காணப்படுகின்றன.

"பெருங்கடல் நீந்தியமரம்" (பதிற்றுப்பத்து, 76); "வெண்கிடைமிதவையர்" (பதிற்றுப்பத்து, 6:35); "முழங்குநீர்ப் புணையெனஅமைந்தறின்தடமென்தோள்" (கலித்தொகை, 56); "வளிவழக் கறுத்த வங்கம்" (புறம். 368:9); "கடலே கால் தந்த கலன் எண்ணுவோர்" (புறம். 386:14); "அருவினை நாவாய் தோன்றும் பெருந்துறை" (நற். 295:6); "கலந்தந்த பொற்பரிசம் கழுத்தோணியாற் கரைசேர்க்குந்து" (புறம். 343:5-6); முதலாகப் பல்வேறு செய்யுள்களும் பல்வேறு அளவினையுடைய கப்பல்களைப் பற்றியனவாக அமைகின்றன. இவற்றுள் நாவாய், கலம், வங்கம் போன்றன பொருட்களை நெடுந்தொலைவு கொண்டுச் செல்வதற்குப் பயன்படுத்தப்பட்ட பெரிய மரக்கலங்களாக இருந்திருக்க வேண்டும்.

பண்டைக்காலத்தில் சிறப்புற்று விளங்கிய துறைமுக நகரங்களுள் காவிரிப்பூம்பட்டினம் சிறப்புடையது. கடற்கரை வணிகத்தில் தலையாயது காவிரிப்பூம்பட்டினம் எனலாம். ஈழம், சீனா, கிழக்கு நாடுகள் போன்றவற்றில் இருந்து இறக்குமதிக்காகக் கொண்டுவரப்பட்ட பொருட்களும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து மிளகு, கறுவா, ஏலம், கிராம்பு முதலாக ஏற்றுமதிக்காகக் கொண்டு வரப்பட்ட பொருட்களும் காவிரிப்பூம்பட்டினத்தில் கையாளப்பட்டு மண்டிக்கிடந்தன என்பதை,

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியுங்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னுங்
குடமலைப் பிறந்த வாரமு மகிலுந்

தென்கடன் முத்துங் குணகடற் றுகிருங்
கங்கை வாரியுங் காவிரிப் பயனு
மீழத் துணவுங் காழகத் தாக்கமு
மரியவும் பெரியவு நெரிய வீண்டி
வளர்ந்தலை மயங்கிய நனந்தலை மறுகி"
(பட்டினப்பாலை, 185-193)

எனப் பட்டினப்பாலை கூறுகிறது. கடல்வணிகத்தின் சிறப்பினால் பல்வேறு மொழிகளையும் பேசுகின்ற பல்வேறு நாட்டு மக்களும் காவிரிப்பூம்பட்டினத்தில் சிறப்பாக வாழ்ந்துள்ளமையை,

"மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்து
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம்" (பட்டினப்பாலை, 216-218)

எனப் பட்டினப்பாலை பதிவு செய்துள்ளது. பொதுவாகத் தமிழகத்தில் இருந்து பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களையும் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

"முழங்குகடல் தந்த விளங்கதிர் முத்தம்
ஆரம்போழ்ந் தறுத்த கண்ணோர் இலங்குவளை
பரதர் தந்த பல்வேறு கூலம்
இருங்கழிச் செறுவில் தீம்புளி வெள்ளுப்புப்
பரந்தோங்கு வரைப்பின் வன்கைத் திமிலர்
கொழுமீன் குறைஇய துடிக்கண் துணியல்"
(மதுரைக்காஞ்சி. 315-320)

முத்துக்கள், சங்கினை அறுத்துச் செய்யப்பட்ட வளையல்கள், பரதவர்களுடைய பல்வகைப் பண்டங்கள், வெள்ளிய உப்பு முதலாகப் பல்வேறு பொருட்களும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. பல்வகைப் பொருட்கள் வேற்று நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்பதை,

"வேறுபல நாட்டிற் கால்தர வந்த
பலவுறு பண்ணியம் இழிதரு நிலவுமணல்" (நற்., 31:8-9)

என நற்றிணை குறிப்பிடப்பட்டுள்ளது. சங்கத் தமிழனுடைய கடல் வணிகம் பாபிலேனியர், சுமேரியர், உரோமானியர், கிரேக்கர் போன்றவர்களுடன் இடம்பெற்றது எனக் கூறப்பட்டாலும் பெரும்பான்மையும் யவனருடனேயே இடம்பெற்றுள்ளதாகவே தெரிகிறது.



"விழுமிய நாவாய் பெருநீரோச்சுனர்
நனந்தலைத் தேஎத்து நற்கலன் உய்ம்மார் புணர்ந்துடன்
கொணர்ந்த புரவியொடு அனைத்தும்
வைகல் தோறும் வழிவழி சிறப்ப" (மதுரைக்காஞ்சி. 321-324)

என யவன தேசத்துக் குதிரைகள் நாள்தோறும் இறக்குமதியாவதை மதுரைக்காஞ்சி பதிவு செய்துள்ளது. சந்தைகள் கூடும் பகுதிகளில் யவனருடைய குடியிருப்புகள் காணப்பட்டுள்ளன. யவனர்கள் அரசனுடைய மெய்க்காப்பாளராகவும் பாசறைக் காவலர்களாகவும் செயற்பட்டமையை,

"யவனர் தந்த வினை மாண்நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி" (அகம்., 149)

என்ற அகநானூற்றின் அடிகள் மூலம், யவன நாட்டு வணிகர்கள் சிறந்த வேலைப்பாடுடைய மரக்கலங்களில் வந்து, பொன்னைத் தந்து, சேரநாட்டில் விளைந்த மிளகினை ஏற்றிச் சென்றுள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

## பொருட்களஞ்சியங்கள்

துறைமுக நகரங்களில் ஏற்றுமதிக்காகக் கொண்டுவரப்பட்ட பொருட்களையும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களையும் களஞ்சியப்படுத்தி வைக்கப்பயன்பட்ட இடம் பண்டகசாலைகள், பொருட்களஞ்சியங்கள் என அழைக்கப்படுகின்றன. சங்க இலக்கியங்களில் பண்டகச்சாலைகள் பந்தர் என்ற பெயரால் சுட்டப்பட்டுள்ளன.

"இன்னிசைப்புணரி இரங்கும் பௌவத்து
நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர்" (பதிற்., 55 )

என இனிமையான ஒலியினைச் செய்யும் அலைகள் ஒலிக்கின்ற கடல் வழியாக வந்த நல்ல கலன்களாகிய செல்வம் தொகுக்கப் பெற்றுக் கிடக்கும் பண்டகச்சாலைகளைக் கொண்ட நல்ல நாடு என்று கூறுகிறது. பெரும்பாணாற்றுப்படையில் பட்டினத்தின்

சிறப்பைக் கூறும்போது, களஞ்சியச் சாலைகள் பற்றிய குறிப்புப் பதிவு செய்யப்பட்டுள்ளது. பால்போலும் வெள்ளிய நிறத்தினையும் தலையாட்டத்தினையும் உடைய குதிரைகளுடனே வடதிசைக்கண் நுகரப்படும் பொருட்களைக் கொண்டு வந்து தருகின்ற மரக்கலங்கள் சூழ்ந்து கிடக்கின்ற கடற்பக்கத்தினையும் வணிகர் வாழும் பல தெருக்களையும் தொழில் செய்வோரால் காக்கப்படும் மிகவும் உயர்ந்த பண்டகசாலைகளையும் உடைய பட்டினம் எனக் கூறப்பட்டுள்ளது. பட்டினப்பாலையில் மேலை நாடுகளில் இருந்து கப்பல் மூலமாகக் கொண்டுவரப்படும் பல பண்டங்கள் காவிரிப்பூம்பட்டினத்தில் இறக்குமதி செய்யப்பட்டதோடு பல பண்டங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதையும் அப்பண்டங்கள் பண்டகசாலையில் வைத்துப் பாதுகாக்கப்பட்டதையும் இங்கு குவிந்து கிடக்கும் வெளியே அனுப்பும் மூட்டைகளின் மேல் சோழ மன்னனின் புலிச் சின்னம் பொறிக்கப்பட்ட பண்டங்கள் தான் வெளியேற முடியும் என்னும் சூழல் காணப்பட்டதையும்,

“நீரினின்றுநிலத்தேறவும்
நிலத்தினின்று நீர்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லங்கினோன்
புலிபொறித்துப் புறம்;போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்” (பட்டினப்பாலை, 129-136)

என வரும் அடிகள் மெய்ப்பிக்கின்றன. இதன் மூலம் ஏற்றுமதி இறக்குமதி வணிகத்தை அரசு தன் அதிகாரத்திற்குள் கட்டுப்படுத்தி வைத்திருந்தமையையும் அறியமுடிகிறது. ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கும் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கும் ஆய வரி விதிக்கப்பட்டுள்ளது.

“வைகல் தொறும் அசைவு இன்றி
உல்கு செயக்குறைபடாது” (பட்டினப்பாலை,124-125)

எனப் பண்டைத் தமிழகத்தில் வரி வசூலிப்பு இடம்பெற்றதையும் அறியமுடிகிறது.



**அங்காடிகள்**

சங்க இலக்கியங்களில் பல்வேறு தொழில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. நெசவுத் தொழில், செப்புத் தொழில், பூ, மீன், உப்பு, கள், நெல், வளையல், முத்து எனப் பல்வேறு பொருட்களையும் விற்பவர்கள் பற்றிய பதிவுகளைச் சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது. இவ்வாறு பல்வேறு தொழில்களும் பெருகிய நிலையில் அங்காடிகள் தோற்றம் பெறலாயின. பகலில் கூடும் நாளங்காடிகளும் இரவில் கூடும் அல்லங்காடிகளும் உருவாகின. அங்காடிகளில் விற்கப்படும் பொருட்களுக்கு ஏற்ப கொடிகள் நடப்பட்டிருந்தன. அல்லங்காடிகளில் கொடிகளுக்குப் பதிலாக வண்ண விளக்குகள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

“மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூட
நாளங் காடி நனந்தலைக் கம்பலை”(மதுரைக்காஞ்சி.429-430)

எனச் சங்குகளை அறுத்து வளையல் செய்வோர், மணிகளில் துளையிடுவோர், பொன்னைக்கொண்டு ஒளிரும் நகை செய்பவர்களும் பட்டு, பருத்தி துணிகள், புடவைகள் விற்பவர்களும் சித்திரம் வரைபவர்களும் இன்னும் பல வணிகர்களும் கூடியிருப்பார்கள். இங்கு கள் விற்கும் கடைகளும் இருந்தன. ஓயாது மீனையும் இறைச்சியையும் அறுத்துப் பொரிக்கும் ஒலி கேட்கும். இந்தக் கடையிலும் கொடி பறக்கும்.

“மீன்றடிந்து விடக்கறுத்து
தூன்பொரிக்கு மொலிமுன்றின்
மணற்குவைஇ மலர்சிதரிப்
பலர்புகுமனைப் பலிப்புதவி
னறவுநொடை கொடியோடு” (பட்டினப்பாலை, 176-180)

எனப் பட்டினப்பாலை கூறுகிறது.

**வணிக அறம்**

அக்கால வணிகர்கள் நேர்மையானவர்களாக உண்மை பேசுபவர்களாக இருந்ததுடன் பொய்பேசுவதை நாணுதற்குரியதாகக் கருதினர். தமக்குக் கிடைக்கும் இலாபத்தை வெளிப்படையாகக்

காட்டிப் பொருள்களை விற்றனர். பிறர்பொருளை மிகுதியாகக் கொள்ளாமலும் தம்முடைய பொருளைக் குறைவான விலைக்குக் கொடுக்காமலும் நடுநிலைமையோடு செயற்பட்டுள்ளனர்.

"நெடுநுகத்துப் பகல்போல்
நடுவுநின்ற நன்நெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவு மொப்ப நாடி
கொள்வதூஉ மிகைகொளாது
கொடுப்பதூஉங் குறைகெடாது
பல்பண்டம் பகர்ந்து வீசும்" (பட்டின., 206-212)

என நெடியநுகத்தில் தைத்த பலகாணிபோல அறம் பிறழாமல் வணிகத்தில் இக்கால வணிகர்கள் ஈடுபட்டுள்ளனர்.

## வணிக அறிவு

பழந்தமிழர் கடல் வணிகத்தில் கொண்டிருந்த அறிவு வியக்கத்தக்கது. கலங்கரை விளக்கங்களை அமைத்து இரவு நேரத்தில் கடலில் வரும் கப்பல்களுக்குத் திசைகாட்டி கரை சேர வைத்திருந்தனர். இதற்காக அவர்கள் அமைத்திருந்த மாடங்கள் வானத்தை முட்டுமாறு அமைக்கப்பட்ட கம்பங்கள் போல உயர்ந்திருந்தன. இரவில் அதில் தீயை உண்டாக்கி அதன் ஒளிமூலம் கலங்கள் கரைசேரும் திசையை அறியச் செய்துள்ளனர் என்பதை,

"வானம் ஊன்றி மதலை போல
ஏணி சாத்திய ஏற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்து
இரவில் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி
உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும்"
(பெரும்பாணாற்றுப்படை, 346-350)

என்ற வரிகள் மூலம் அறிய முடிகிறது.

## முடிவுரை

சங்க காலம் தமிழர் வரலாற்றில் பொருளாதாரம், பண்பாடு, அரசியல் ஆகிய அனைத்துத் துறைகளிலும் சிறப்புற்ற காலமாக விளங்குகிறது. குறிப்பாகக் கடல் வணிகம் தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சிக்கும் உலகத் தொடர்புகளுக்கும் அடித்தளமாக இருந்தது எனலாம். நிலப்பரப்பில் மட்டுமல்லாது கடல் வழியாகவும் வணிகத்தை விரிவுபடுத்திய தமிழர்கள் தங்கள் அறிவு, துணிவு மற்றும் ஒழுங்கமைப்புத் திறன்களை உலகுக்கு எடுத்துச்சென்றனர். சங்க இலக்கியங்களின் வாயிலாக அறியும் பழந்தமிழரது கடல் வணிகம் பற்றிய தகவல்கள் அத்துறையில் அவர்கள் கொண்டிருந்த ஆழத்தையும் பரப்பையும் ஒருசேர வெளிப்படுத்துகின்றன. சங்ககாலத்தில் சிறப்புற்று விளங்கிய முசிறி, பூம்புகார், கொற்கை, சாலியூர், தொண்டி போன்றதுறைமுகங்கள் அக்கால கடல்வணிகத்தின் முக்கிய மையங்களாக விளங்கியதோடு தமிழகத்தின் உள்நாட்டுப் பகுதிகளையும் வெளிநாடுகளையும் இணைக்கும் பாலமாகச் செயற்பட்டன. இத்தகைய கடல் வணிகம் பொருளாதார வளர்ச்சியுடன் மட்டும் நில்லாது சமூகப்பண்பாட்டுப் பரிமாற்றத்தையும் தமிழ்நாட்டில் ஏற்படுத்தியது. சங்ககால கடல் வணிகம் என்பது தமிழர் நாகரிகத்தின் உச்ச நிலையை எடுத்துரைக்கும் முக்கியமான ஒரு செயற்பாடாக விளங்கியதெனலாம்.



## உசாத்துணை நூல்கள்


1. சுப்பிரமணியன்.ச.வே., சங்க இலக்கியம்(முழுவதும்), 2003,மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
2. சுந்தரம்.மெ., சங்ககாலத் தமிழரின் கடல் வணிகம்,1978, பாரிநிலையம், சென்னை.
3. சுபாசுசந்திரபோசு.பெ., தமிழரின் கடல் வணிகமும் பண்பாடும், 2017, அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர்.
4. சசிவல்லி.வி.சி., பண்டைத்தமிழர் தொழில்கள், 1989, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
5. வித்தியானந்தன்.சு., தமிழர் சால்பு,1971, பாரி புத்தகப் பண்ணை, சென்னை.